## மெரினா கடற்கரையை சர்வதேச தரத்திற்கு உயர்த்தி சுற்றுலாத் தலமாக மாற்றுக!

# விருகம்பாக்கம் தொகுதி ஒரே வார்டில் 554 பேருக்கு பட்டா வழங்கியதற்கு நன்றி!

## சட்டப் பேரவையில் ஏ.எம்.வி. பிரபாகரராஜா பேச்சு!

**சென்னை,ஏப்.5-**

**சட்டப் பேரவையில் வருவாய்த்துறை மானியத்தில் விருகம்பாக்கம் தொகுதி உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா பேசுகையில் விருகம்பாக்கம் தொகுதி 128-வது வார்டில் மட்டும் 554 நபர்களுக்கு பட்டா வழங்கியதற்கு நன்றி கூறினார்.**

**வருவாய்த்துறை மானியத்தில் விருகம் பாக்கம் தொகுதி ஏ.எம்.வி. பிரபாகர ராஜா பேசியதாவது:**

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்கி, வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்று தமிழுக்காக வாழ்ந்து என்றும் தமிழர் நெஞ்சில் வாழ்ந்துகொண்டிருக்கிற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்களின் இறுதி காலக்கட்டத்தில் ஒரு பத்திரிகையாளர் நீங்கள் தி.மு.க. எனும் மாபெரும் இயக்கத்தின் தலைவர். மிக நீண்ட அரசியல் பயணத்திற்கு சொந்தக்காரர். நீங்கள் யாரை தமிழகத்தின் அடுத்த சிறந்த தலைவர் என்று நினைக்கிறீர்கள்? என்று கேட்டபோது, தமிழ்நாட்டிற்கு வருகிற பிரச்சினையை முன்பே அறிந்து அதை முளையிலே கிள்ளி எறியும் தலைவனே சிறந்த தலைவன் என்று ஐயா கலைஞர் அவர்கள் அன்றைக்கு பதில் சொன்னார் எண்ணி பார்க்க வேண்டும். தலைவர் அவர்கள் இதைச் சொல்லி, சுமார் 7, 8 ஆண்டுகள் முடிவுற்றன. இன்றைக்கு 2025 ஆம் ஆண்டில் இருக்கிறோம். தலைவர் மிகப்பெரிய தீர்க்கதரிசி தெளிவாக சொல்லிவிட்டு சென்றிருக்கிறார். தமிழ்நாட்டிற்கு எத்தகையப் பிரச்சினைகள் எந்த சக்தியின்மூலம் வந்தாலும், யார் கொண்டு வந்தாலும் அதனை முளையிலேயே கிள்ளி எறிந்து செயல்படக்கூடிய தமிழகத்தின் சிறந்த தலைவரும், (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர் எங்கள் அப்பா தளபதி அவர்களை வணங்கி, அயோத்திதாசர், சர்.பிட்டி தியாகராயர், நடேசனார், டி.எம். நாயர், தந்தை பெரியாரை தொடர்ந்து நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் இன்றைய வரலாறு நாளைய தமிழகத்தின் ஒரே தலைவர், கொள்கை தலைவர், வெற்றித் தலைவர் திராவிட இயக்கத்தின் Formula-5 இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், இந்தத் துறையினுடைய அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கும், எங்களையெல்லாம் வழிநடத்தக்கூடிய என் அரசியல் தந்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாரத்தான் நாயகர் மா. சுப்பிரமணியன் அவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்கள் என அனைவருக்கும் என்னுடைய வணக்கங்கள் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை என்பது மாநிலநிர்வாகத்தின் முதுகெலும்பாக விளங்குகிறது. இத்துறையின் மீதான மானிய கோரிக்கையின்மீது உரையாற்றுவதில் பெருமை கொள்கிறேன். தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் நிர்வாக வசதிக்காக பல்வேறு மாவட்டங்களை பிரித்தார். குறிப்பாக 1974-ல் புதுக்கோட்டை மாவட்டம், 1989-ல் திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், 1996-ல் திருவள்ளூர், தேனி மற்றும் திருவாரூர் மாவட்டம், 1999-ல் அரியலூர் மாவட்டம் 2009-ல் திருப்பூர் மாவட்டம் இப்படி எண்ணற்ற மாவட்டங்களை அன்றைய காலத்தில் தலைவர் அவர்கள் பிரித்ததால்தான் இன்றைக்கு தமிழ்நாடு பல்வேறு விதங்களில் வளர்ந்திருக்கிறது, உயர்ந்திருக்கிறது.

அந்தவகையில் முதலமைச்சர் அவர்கள், நம் மாநிலம் பல்வேறு நிதிசுமையில் இருந்தாலும், எதிர்வரும் காலங்களில் தமிழ்நாட்டினுடைய நலன்கருதி, நிச்சயமாக பல மாவட்டங்களைப் பிரித்து, வளர்ச்சிப் பாதைக்கு அழைத்து செல்வார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், தாலுகாக்களைப் பிரப்பதைப் பொறுத்தவரையில், நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னையில் கொளத்தூர், தஞ்சாவூர், திருவோணம் போன்ற தாலுகாக்களைப் பிரித்திருக்கிறார். இதனால் அப்பகுதிகள் வளர்ச்சிப் பாதைக்குச் சென்று கொண்டிருக்கின்றன.

அந்தவகையில் விருகம்பாக்கம் தொகுதியில் மாம்பலம், அமைந்தகரை என இரண்டு தாலுகாக்கள் உள்ளன. கோயம்பேட்டை மையப் பகுதியாக வைத்து ஒரு தாலுகாவை உருவாக்கித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கடலூர் சட்டமன்ற உறுப்பினர் நெய்வேலி தொகுதிக்கும் ஒரு தாலுகா கேட்டிருக்கிறார். அதனையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்று சொல்வார்கள். வீடு இங்கே, பட்டா எங்கே என்று கடந்தகாலங்களில் மக்கள் ஏங்கித் தவித்தார்கள். இன்றைக்கு தமிழக முதலமைச்சர் 'இரண்டாம் ராஜராஜ சோழன்' எண்ணற்ற மக்களுக்கு பட்டாக்களை வழங்கிக் கொண்டிருக்கிறார் என்பதற்கான ஆதாரமாக பல்வேறு புள்ளிவிவரங்கள் எங்களிடம் இருக்கின்றன. உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம். இந்த மூன்றும்தான் ஒரு மனிதனுக்கு சராசரியான அடிப்படைத் தேவைகள். அந்த வகையில் மாற்று உடை இல்லாதவர்களுடைய நிலையினை மாற்றியவர்தான் ஐயா கலைஞர் என்ற மகத்தான தலைவர். அந்த வகையில்

### முதலமைச்சர் தலைமையில் உயர்மட்டக்குழு!

இன்றைக்கு நமது தமிழக முதலமைச்சர் அவர்கள், ஏழையெளிய மக்களுடைய கனவை நனவாக்கும் வகையில், எப்படி ஒரு கணவனுக்கும், மனைவிக்கும் இடையே தாலி அடையாளச் சின்னமாக இருக்கிறதோ, அதேபோல, இருக்கக்கூடிய மனைக்கு பட்டா என்பது மிகப்பெரிய ஒரு அடையாளமாக இருக்கிறது. இன்றைக்கு நமது தமிழக முதலமைச்சர், திராவிட மாடல் நாயகன் அவர்கள், 2021-2022 ஆம் ஆண்டில் 2,07,439 நபர்களுக்கும், 2022-2023 ஆம் ஆண்டில் 2,57,215 நபர்களுக்கும், 2023-2024 ஆம் ஆண்டில் 2,62,732 நபர்களுக்கும், 2024-2025 ஆம் ஆண்டில் 2,99,348 நபர்களுக்கும் என இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 10,26,734 நபர்களுக்கு பட்டா வழங்கிய



ஒரே முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) நமது முதலமைச்சர் மட்டும்தான். சென்னையைப் பொறுத்தவரை 22 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. இதனை belt area என்று 1962 ஆம் ஆண்டு அறிவித்தார்கள். ஐயா, கலைஞர் அவர்களால்தான் இரயத்து வாரி என்ற சட்டத்தைக் கொண்டுவந்து, அன்று பட்டா வழங்கப்பட்டது. பின்பு கடந்த பத்தாண்டுகளில் எந்தவொரு முன்னெடுப்பும் எடுக்கப்படாமல் இருந்தது.

இன்றைக்கு நமது துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. அதன்காரணமாக, சென்னையில் 40-50 ஆண்டுகாலமாக பட்டா கிடைக்குமா? என்ற கனவோடு இருந்த 42,500 குடும்பங்களுக்கு பட்டா வழங்கிய ஒரே தலைவர் நம் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். 'This is called key of success' என்று சொல்வார்கள். அந்த key of success யாரென்றுசொன்னால், our one and only youth icon Thiru. Udhayanidhi Stalin என்ற (மேசையைத் தட்டும் ஒலி) என்ற மகத்தான தலைவர் மட்டும்தான். எங்களுடைய தொகுதியில், வார்டு எண் 128-ல் மட்டும் இதுவரை 554 நபர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இனி எதிர்வருங் காலங்களில் எஞ்சிய பகுதி மக்களுக்கும் நிச்சயமாக பட்டாக்களை வழங்க நம் துணை முதலமைச்சர் அவர்கள் காத்திருக்கிறார்கள். அதேபோல், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் இப்படி எண்ணற்ற மக்களுக்கு நம் துணை முதலமைச்சர் அவர்கள் பட்டாக்களை வழங்கிக் கொண்டிருக்கிறார். நமது அரசைப் பொறுத்தவரை, இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் என்று சொல்வார்கள். நமது துணை முதலமைச்சர் அவர்கள், திருவாரூருக்கு அரசு நிகழ்ச்சிக்காக சென்றிருந்தார். அப்போது, திருவாரூர் மாவட்டம், திருவாரூர் ஒன்றியம், பழவனக்குடி கிராமத்தைச் சேர்ந்த மக்கள், நமக்கு பட்டா வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைக்கிறார்கள். வெறும் ஆறு மணிநேரத்தில் அவர்களுடைய இல்லம் தேடி சென்று பட்டா வழங்கிய ஒரே முதலமைச்சர் இந்தியாவில் நமது துணை முதலமைச்சர் மட்டும்தான். அப்படிப்பட்ட திட்டங்களை செயல்படுத்தி, இந்தத் துறை இன்றைக்கு சாதனைப் படைத்துக்கொண்டிருக்கிறது. இந்தத்துறைக்கு ஒன்றிய அரசு மிகப்பெரிய நிதி நெருக்கடி தந்து கொண்டிருந்தாலும், OAP, DAP போன்ற பென்ஷன்களையும் சிறப்பாக இந்தத் துறை கையாண்டுக் கொண்டிருக்கிறது. அந்தவகையிலே பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய் மற்றும் பேரிடர் துறையைப் பொறுத்தவரை இன்றைக்கு பணியாளர் நியமனம். வருவாய்த் துறையில் இந்த ஆட்சி வந்த பிறகு 4,528 பணியாளர்களை நியமனம் செய்திருக்கிறோம். அதேபோன்று, இந்தத் துறையின் முக்கிய அம்சம் சமூக விரோதிகள், ஆக்கிரமிப்பாளர்களிடத்திலுள்ள இடங்களை மீட்டெடுப்பது. அந்தவகையில், சோளிங்கநல்லூர் தொகுதியில் துறையின் அமைச்சரும், எங்கள் மாவட்டத்தின் அமைச்சரும், தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினரும் 112 ஏக்கர் நிலத்தை மீட்டெடுத்து, தற்போது அங்கே ஒரு விளையாட்டு நகரம் உருவாகிக் கொண்டிருக்கிறது. எண்ணிப்பார்க்க வேண்டும். இதற்கு முன்பு இந்தத் துறையில் இப்படிப்பட்ட சாதனை படைக்கப்பட்டதா? இல்லை. இன்றைக்கு இதுபோன்ற பல திட்டங்கள் இந்தத் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. நிலமீட்பு என்பது ஒரு உதாரணம்தான். இது போன்ற பல விவரங்கள் இருக்கின்றன. இருந்தாலும், பேரவைத் தலைவர் அவர்கள் நேரம் தர மாட்டீர்கள். ஒன்றை மட்டும் இந்தத் துறையில் சொல்லிக்கொள்கிறேன்.

"காத்திருந்து, காத்திருந்து காலங்கள் போனதடி"

என்ற பாடல் வரிகள்தான் என் நினைவுக்கு வருகிறது. அதேபோலதான், கடந்த காலங்களில் பட்டா பெறுவதற்கு பதிவு செய்து, காத்திருந்து காத்திருந்து பட்டா ஒன்றும் கிடைக்கவில்லை என்ற நிலையில் மக்கள் இருந்தார்கள். இன்றைக்கு 2021-2022 ஆம் ஆண்டில் விண்ணப்பித்த நாளிலிருந்து 70 நாட்களில் பட்டா கொடுத்தோம், 2022-2023 ஆம் ஆண்டில் விண்ணப்பித்த நாளிலிருந்து 63 நாட்களில் கொடுத்தோம். 2023-2024 ஆம் ஆண்டில் விண்ணப்பித்த நாளிலிருந்து 31 நாட்களில் கொடுத்தோம். 2024-25 ஆம் ஆண்டில் விண்ணப்பித்த நாளிலிருந்து 27 நாட்களில் இன்றைக்கு நாம் பட்டா வழங்கிக் கொண்டிருக்கின்றோம். இப்படி இந்தத் துறை மிகப்பெரிய சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது.

அரசாணை 97-ன்படி ஒரு சென்ட் மனை வைத்திருப்பவர்களுக்கு பட்டா இலவசம் என்று அறிவித்திருக்கிறீர்கள். நாங்களெல்லாம் சென்னையில் வசித்து வருகிறோம். இங்கு நிறைய ஏழை மற்றும் நடுத்தர மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஒரு சென்ட் என்பது 435 சதுர அடி அளவுதான் இருக்கும். எனவே, முதலமைச்சர் அவர்கள், 500 சதுர அடி, 600 சதுர அடி, 700 சதுர அடி வைத்திருப்பவர்களையும் consider செய்து, அந்த வரையறையை 2 சென்ட் என மாற்ற வேண்டுமென்று பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

### மேய்க்கால் புறம்போக்கு நிலத்திற்கு பட்டா!

அடுத்து, மேய்க்கால் புறம்போக்கு. சென்னையைப் பொறுத்தவரை, ஆடு, மேடு மேய்க்கக்கூடிய நிலை இல்லை. சென்னை நன்றாக வளர்ச்சியடைந்து விட்டது. வருவாய்த் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி அமுதா, இ.ஆ.ப. அவர்களும் இங்கே இருக்கிறார்கள். எனவே, தயவு செய்து மேய்க்கால் புறம்போக்கு நிலத்திற்கும் பட்டா வழங்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பேரிடர் மேலாண்மை. பேரிடர் மேலாண்மையைப் பற்றி சொல்ல வேண்டுமானால், (மணியடிக்கப்பெற்றது) நேற்றைக்கு ஒன்றிய அரசானது மக்கள் விரோத சட்டத்தை இரவு 2 மணிக்கு இயற்றுகிறது; ஆனால், நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் பேரிடரின்போது, இரவு 12 மணிக்கு பள்ளிக்கரணை நாராயணபுரம் ஏரிக்குச் சென்று ஆய்வு செய்து கொண்டிருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பக்கம், ஒன்றிய அரசு இரவு 2 மணிக்கு மக்கள் விரோத சட்டத்தை இயற்றுகிறது. ஒரு பக்கம் நமது அரசு பேரிடர் காலங்களில் மக்களின் துயர் துடைக்கும் பணிகளைச் செய்யக்கூடிய ஒரு துணை முதலமைச்சராக, முதலமைச்சராக நமது ஆட்சியாளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) யார் மக்களுக்கானவர்கள் என்பதை மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே, வருகின்ற 2026 ஆம் ஆண்டு தேர்தலில் மக்கள் சரியான தீர்ப்பை வழங்கக் காத்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். ஒரு சில பொதுக் கோரிக்கைகளும், தொகுதிக் கோரிக்கைகளும் உள்ளன. அதற்கு இரண்டு நிமிடங்கள் வழங்க வேண்டுமாய் பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் 15 பேர் கொண்ட குழு அமைத்து, அதில் மாவட்ட வருவாய் அலுவலர் மேற்பார்வையில் வணிகர் பாதுகாப்புக் குழு அமைத்துத் தர வேண்டும்.

அடுத்து, இந்து சமய அறநிலையத் துறை. மாநகராட்சி, நகராட்சி, வீட்டு வசதித் துறையின்மூலம் வணிகர்களுக்கு வணிகம் செய்ய 400 சதுர அடி இடத்தினை வாடகைக்கு வழங்குகிறார்கள். அதற்கு ஒரே மாதிரியான வாடகை fix செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### மெரினா கடற்கரையை சுற்றுலாத் தலமாக மாற்றுக!

ஆசியாவின் மிகப் பெரிய கடற்கரையான மெரினா சர்வதேச தரத்தில் உயர்த்தி, மிகப் பெரிய சுற்றுலாத் தலமாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சென்னை மாநகராட்சியில் உள்ள 200 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் Physiotherapy சிகிச்சையும் வழங்க வேண்டும். VAO அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டவதற்கு உறுதி செய்து தர வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆட்டோ ஓட்டுநர் நலன். தற்போது Apps வந்துவிட்டன. தற்போது bike taxi காரணமாக ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஓர் App உருவாக்கித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் வாழ்க, இந்தி ஒழிக என்று முழங்கிய தியாகி அரங்கநாதன் அவர்கள் எங்கள் தொகுதியைச் சேர்ந்தவர். அவருக்கு ஒரு மணிமண்டபம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடையாறு ஆற்றங்கரையோரம் வசிக்கக்கூடிய மக்களுக்கு தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டுமென்று நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சிறுபான்மையின மக்களின் கோரிக்கையான கபர்ஸ்தான், கிறிஸ்துவர்களுக்கான கல்லறை குறித்து கோரிக்கை கொடுத்திருக்கிறேன். அவற்றை செய்து தர வேண்டும்.

ஒரேயொரு நிமிடம் தாருங்கள். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம் மட்டும். 3 இலட்சம் மக்களின் குரலாகப் பேசிக் கொண்டிருக்கிறேன். ஒரு நிமிடம் மட்டும் தாருங்கள். கிரயப் பத்திரம் குறித்து. அரசாணை எண் 804-ல், slum-ல் second allottee-க்கு G.O. வெளியிடப்படவில்லை. அதை விரைவில் செய்து தர வேண்டும்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையால், பெசண்ட் நகரில் Health Walk Track அமைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று சென்னையின் மற்ற பகுதிகளிலும் அமைத்துத் தருமாறு, குறிப்பாக எங்கள் தொகுதியில் அமைத்துத் தருமாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்பேட்டில் Multi-level car parking அமைத்துத் தர வேண்டும். கோயம்பேட்டில் அரசு நிலம் இருக்கிறது. அந்த நான்கரை ஏக்கர் இடத்தில் அரசு பள்ளி ஒன்றினை அமைத்துத் தர வேண்டுமென்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இறுதியாக ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். ஒரேயொரு நிமிடம் தாருங்கள். ஒரு நிமிட

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அக்கோயிலுக்கு வழங்கியுள்ளார்கள். அந்த குறுங்காலீஸ்வரர் கோயில் குளத்தைத் தூர்வாரி சுத்தப்படுத்தி சீரமைத்துத் தர வேண்டுமென்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எஞ்சிய கோரிக்கைகளை.

எ.எம்.வி. பிரபாகரராஜா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எஞ்சிய கோரிக்கைகளை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, இறுதியாக ஒன்றைச் சொல்லி நன்றி சொல்லி விடைபெற விரும்புகிறேன்.

ஓரெழுத்தில் தமிழ் மூச்சு, ஈரெழுத்தில் இருமொழி ஆட்சி, மூன்றெழுத்தில் என்றும் தி.மு.க. ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) முழங்கிடுவோம், முழங்கிடுவோம் மும்மொழிக் கொள்கையை என்றும் எதிர்ப்போம் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு போராடும், வெல்லும். 200 தொகுதிகளில் வென்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக மீண்டும் இந்த அவைக்கு முதலமைச்சராக வருவார்கள் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) என் தொகுதி மக்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு எ.எம்.வி.பிரபாகர ராஜா பேசினார்.

---



கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் முன்னிட்டு கல்வெட்டு திறப்பு விழா நலத்திட்டம் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ வி.ஜி.ராஜேந்திரன் அறிவுறுத்தலின்படி ஒன்றிய செயலாளர் எஸ்.மகாலிங்கம் ஆலோசனைபடி திருவள்ளூர் மேற்கு மாவட்ட திருவலங்காடு கிழக்கு ஒன்றியம் சின்னகளக்காட்டூர் பகுதியில் கிளைச் செயலாளர் நந்தகுமார் தலைமையில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மணிமேகலா நந்தகுமார் வரவேற்பில் நடைபெற்றது இதில் திமுக கொடியினை ஏற்றி 100க்கும் மேற்பட்ட பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் மாணவ மாணவியர்களுக்கு நோட்டு புத்தகங்களை வழங்கப்பட்டது. உடன் மணவாளன், கண்ணகி, எஸ்.சீனிவாசன், எஸ்.ராணி, கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளனர்.

### தியாகராயர் நகர் மேற்குப் பகுதி

## 133,133 (அ) வட்டத்தில் 5 இடங்களில் தண்ணீர் பந்தல்!

### வட்டச் செயலாளர்கள் பி.ஜெயகுமார் – பி.மாரி அறிக்கை!

*சென்னை,ஏப்.5-*

*தியாகராயர்நகர் மேற்கு பகுதிக்குட்பட்ட 5 இடங்களில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா!!! வட்ட கழக செயலாளர்கள் பி.ஜெயக்குமார், பி.மாரி ஆகியோர் விடுதுள்ள அறிக்கை வருமாறு:*

*தியாகராயர்நகர் மேற்கு பகுதி 133வது மற்றும் 133 அ வட்டத்தில் 5 இடங்களில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி அவர்கள் தலைமையில், தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ அவர்களின் முன்னிலையில், சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர்மயிலை த.வேலு எம்.எல்.ஏ அவர்கள் கலந்துகொண்டு நீர் மோர் பந்தலை திறந்துவைக்கவுள்ளார்கள்.*

*வருகின்ற 06-04-2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10 மணியளவில் 33வது மற்றும் 133 அ வட்டத்தில் 5 இடங்களில் நீர் மோர் பந்தல் திறக்கப்படவுள்ளது.*

*வட்ட செயலாளர்கள் பி.ஜெயக்குமார், பி.மாரி அவர்கள் மற்றும் ஹரி ஏற்பாட்டில் துரைசாமி சாலை, உஸ்மான் சாலை சந்திப்பில். வட்ட செயலாளர் பி.மாரி தலைமையில் - தண்டபாணி தெரு 3. 133 'அ' வட்ட செயலாளர் பி.மாரி தலைமையில் - வெங்கட் நாராயண ரோடு திருப்பதி தேவஸ்தானம் அருகில் 4. 133 வட்ட செயலாளர் பி.ஜெயக்குமார் தலைமையில் - ஆனந்தன் தெரு, வடக்கு உஸ்மான் சாலை சந்திப்பில் 5. பகுதி துணை செயலாளர் பாபா சுரேஷ் தலைமையில் - பாண்டிபஜார் தியாகராயர் சாலையில் நடைபெறுகிறது.*

*இந்நிகழ்ச்சியில் 133வது மற்றும் 133 அ வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி பிரதிநிதிகள், பாக பொறுப்பாளர்கள், பாக உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.*





சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் 107வது வட்டத்தில் மகளிர் தொண்டரணி சார்பில் துணை அமைப்பாளர் சியாமளா செந்தில் தலைமையில் கோலப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசும், 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் மாநில மகளிர் ஆணைய தலைவி குமரி விஜயகுமார், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் எம். கே. மோகன்,பகுதி செயலாளர் ந.இராமலிங்கம்,தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக்மோகன் ஆகியோர் வழங்கினர். இதில் 107 வது வட்ட செயலாளர் டி. கருணாநிதி, ராணி ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.